இணைப்பு 05

## 06.கால வரையறை, செயற்படுத்தும் பொறுப்பு மற்றும் அங்கீகரித்தல் மற்றும் நிதி ஒதுக்கீடுகள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல போட்டிகள் வங்கிமட்டத்திலும் பிரதேச பிரிவு மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் செயற்படுத்தப்படல் வேண்டும். அந்தந்த மட்டங்களில் உத்தியோகத்தர்கள் சரியான விதத்தில் போட்டிகள் நடைபெறுகின்றது என பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

| கட்டம் | செயற்படுத்தும் பொறுப்பு, அங்கீகரித்தல், மற்றும் கண்காணிப்பு | ஒப்படைக்கப்படுகின்ற பொறுப்புக்கள் | போட்டியினை நடாத்த வேண்டிய காலம் |
|---|---|---|---|
| வங்கிச் சங்க மட்டம் | பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வங்கிச் சங்க சமுர்த்தி வலய முகாமையாளர்கள் போட்டி நடைபெறும் போது கண்காணிப்பு - பிரதேச செயலாளர்/ உதவிப் பிரதேச செயலாளர்/முகாமைத்துவ பணிப்பாளர் அல்லது தலைமையக முகாமையாளர் | • கலந்து கொள்ளும் போட்டியாளர்களுக்கு வங்கிக் கணக்கு உள்ளதனை பரீட்சிப்பது, வயதுத்தொகுதி சரியானதுதென பரீட்சிப்பது<br>• பிறப்புச்சான்றிழை பரீட்சிப்பதும் வெற்றி பெறுபவர்களின் பெயர்ப்பட்டியலைத் தயாரித்தல்<br>• போட்டிப் பெறுபேறுகளை பிரதேச செயலாளருக்கு 2017-06-20ம் திகதிக்கு முன்னர் வழங்குதல் வேண்டும். | 2017 ஜீன் 15ம் திகதிக்கு முன்னர் |
| பிரதேச செயலகப் பிரிவு மட்டம் | சமூக அபிவிருத்தி உதவியாளர், தலைமையக முகாமையாளர் / முகாமைத்துவ பணிப்பாளர்/ உதவிப் பிரதேச செயலாளர்/ போட்டி நடைபெறும் போது கண்காணிப்பு- மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்/மாவட்டச் செயலகத்தின் விடயத்துடன் தொடர்புடைய முகாமையாளர்கள். | • வங்கிக் கணக்கு, வயது சரியானது தொடர்பில் பிறப்புச் சான்றிதழை பரீட்சித்தல்<br>• வலயத்தினால் வழங்கப்பட்ட வெற்றி பெற்றோரின் பட்டியலை பரீட்சித்து சரியான பட்டியலுக்கமைய போட்டிகளை நடாத்துதல்.<br>• வெற்றி பெற்றோர் பெயர்ப்பட்டியலை தயாரித்தல்.<br>• அப் பெயர்ப்பட்டியலை மாவட்டத்திற்கு 2017-08-05ம் திகதிக்கு முன்னர் வழங்குவது தொடர்பில் பொறுப்பேற்றல் | 2017 ஜீலை 30ம் திகதிக்கு முன்னர் |
| மாவட்ட மட்டம் | சமூக அபிவிருத்தி விடய முகாமையாளர், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் போட்டி நடைபெறும் போது கண்காணிப்பு - சமூக அபிவிருத்தி பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் / தலைமைக்காரியாலயத்தின் விடயத்துடன் தொடர்புள்ள முகாமையாளர்கள் | • வங்கிக்கணக்குகள் பிறப்புச் சான்றிதழ்களைப் பரீட்சித்தல்<br>• பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட வெற்றி பெற்றோர் பெயர்ப்பட்டியலை பரீட்சித்து சரியான பெயர்ப்பட்டியலுக்கமைய போட்டிகளை நடாத்துதல்<br>• வெற்றி பெற்றோர் பெயர்ப்பட்டியலைத் தயாரித்தல்<br>• அப் பெயர்ப்பட்டியலை தலைமைக் காரியாலயத்திற்கு 2017-09-30ம் திகதிக்கு முன்னர் வழங்குதல் வேண்டும். | 2017 செப்டம்பர் 15ம் திகதிக்கு முன்னர் |

| | | | |
|---|---|---|---|
| தேசிய மட்டம் | பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர் (சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் ) பிரிவின் சகல உத்தியோகத்தர்கள் கண்காணிப்பு- பணிப்பாளர் தலைமையதிபதி , மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி , பணிப்பாளர் (மனித வளங்கள்) பிரதம கணக்காளர் | மாவட்டத்தினை தொடர்பு கொண்டு சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல தேசிய போட்டிகளை குறிப்பிட்ட பிரகாரம் நடாத்தி பெறுபேறுகளை வெளியிடுதல். | 2017 ஒக்ரோபர் 30ம் திகதிக்கு முன்னர் |
| தேசிய வைபவம் | பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர் (சமூக அபிவிருத்தியும் சுற்றாடலும்) பிரிவின் சகல உத்தியோகத்தர்கள்) | தேசிய போட்டிகளிலிருந்து தெரிவு செய்யப்படுகின்ற வெற்றியாளர்களை பாராட்டுதல் | 2017 செப்டம்பர் |

இப் போட்டிகள் நடைபெறும் கால எல்லைக்குள் மேலுள்ள பிரகாரம் குறித்த உத்தியோகத்தர்கள் பொறுப்புக்களை வகிப்பது கட்டாயமானதாகும் என்பதுடன் குறித்த போட்டிகள் நடைபெறும் நாட்களில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் கண்காணிப்பு நடவடிக்கைகளின் பொருட்டு உத்தியோகத்தர் மட்ட பிரதிநிதித்துவத்தினை கலந்து கொள்ளச் செய்தல் வேண்டும்.

I. மாவட்ட மட்டம் வரை மாத்திரம் போட்டிகளை நடாத்தியதன் பின்னர் அந்தந்த போட்டிகளுக்குரிய வயதுத் தொகுதியிலிருந்து முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்ட பிள்ளைகள் தேசிய போட்டிகளின் பொருட்டு கலந்து கொள்ளச் செய்தல் வேண்டும்.

II. மேற்படி கால வரையறைக்கேற்ப போட்டிகளின் குறித்த மட்டத்தினைப் பூர்த்தி செய்ய வேண்டியதுடன் மாவட்ட போட்டிப் பெறுபேறுகளை 2017-09-30ம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள படிவத்திற்கமைய தெளிவாக தயாரித்து தலைமைக்காரியாலயத்தின் சமூக அபிவிருத்தி பிரிவிற்கு அனுப்புதல் வேண்டும்.

III. தேசிய போட்டிகளின் பொருட்டு பெயர்ப் பட்டியலை சமர்ப்பிக்கும் போது போட்டியாளர்களின் பெயர்களை பிழையின்றி குறிப்பிட்டு அனுப்புவதற்கு விசேட கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும் சிறார்களின் பெயர்களை முதலெழுத்துக்களுடன் ஆங்கில எழுத்தில் குறிப்பிடல் வேண்டும். தமிழ் மொழி மூல பெயர்களின் முழுப்பெயரை ஆங்கில மொழியிலும் தமிழ் மொழியிலும் அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்

**(கீழுள்ள படிவத்தினை மாத்திரம் பயன்படுத்தி குறித்த போட்டிகளின் பெறுபேறுகளை அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுட்டிக்காட்டுவதுடன் இதற்கு அப்பாற்பட்டதாக கிடைக்கின்ற எந்த பெறுபேறும் பொறுப்பேற்கப்படமாட்டாது என மேலும் குறிப்பிடுகின்றேன்)**

உதாரணம்:-

| தொ.இல | மாவட்டம் | பி.செ.பிரிவு | சிறுவர் கழகத்தின் பெயர் | சிறுவர் கணக்கு வைத்திருக்கும் வங்கியின் பெயரும் கணக்கு இலக்கமும் | போட்டி நிகழ்ச்சி | வயதுத் தொகுதி | போட்டியாளரின் பெயர் | பிறந்த தினம் | பெற்றுக் கொண்ட நிலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | கம்பஹா | மகரை | சமு/சிறு/கம்/மக/01 | 1801/03/30/01 | பேச்சு | 7-10 | ஏ.டி.காஷினி பாலிகா | | முதலாம் நிலை |

கூட்டு போட்டியின் பொருட்டு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | மாத்தறை | மாத்தறை | சமு/சிறு/மாத்/மாத்/01 | 1801/03/30/01 | கிராமிய நடனம் (கூட்டு / கலவன்) | 15-18 | கைகோர்த்து பாடலின் பொருட்டு இவ்விடத்தில் 1-16 வரையிலான பெயர்களை சரியாகக் குறிப்பிடல் வேண்டும் | | முதலாம் நிலை |

## 07.நடுவர் குழுவினை தெரிவு செய்வதும் அங்கீகரிப்பதும்

வங்கிச் சங்கம், பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தின் போட்டிப்பிரிவுகளை மத்தியஸ்தம் செய்யும் பொருட்டு அந்தந்த விடயங்களில் நிபுணத்துவம் வாய்ந்த உத்திபோயத்தர்களை நியமித்து கொள்ள வேண்டியதுடன் இவ்வாறு நியமித்துக் கொள்ளப்படுகின்ற மத்தியஸ்த குழுவினை பிரதேச செயலாளரும் மாவட்ட செயலாளரும் அங்கீகரித்தல் வேண்டும்.

## 08.நிதி ஒதுக்கீடுகள்

ஒரு மொழியில் போட்டிகளை நடாத்தும் பொருட்டு வங்கிச் சங்க மட்டத்தில் உயர்ந்த பட்சம் ரூபா 10000/= மும் பிரதேச செயலக பிரிவு மட்டத்திலான போட்டிகளின் பொருட்டு உயர்ந்த பட்சம் ரூபா 20000/= இற்கு உட்பட்டதாகவும் பதாதைகளை காட்சிப்படுத்த உயர்ந்த பட்சம் ரூபா1000/= என்ற வகையில் உரிய சமூக அபிவிருத்தி மன்றங்களிலிருந்து செலவுகளை மேற்கொள்வதற்கு அங்கீகாரத்தினை வழங்குகின்றேன். மாவட்ட போட்டிகளின் பொருட்டு ஒரு பிரதேச செயலகப் பிரிவிற்கு உயர்ந்த பட்சம் ரூபா 10000/= என்ற வகையில் தலைமைக் காரியாலயத்தின் ஊடாக மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீட்டினை விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.